REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

## பீடி புகைத்ததற்கு 15 ரூபாய் அபராதம்!

டால்டன்கஞ்(பீகார்), டிச. 15—

இங்குள்ள நீதிமன்றமொன்றில் பாரா வேலை செய்து முடித்த பின் ஒரு போலீஸ்காரர் நீதிமன்றத்திலுள்ளேயே தனது களைப்பு நீங்க பீடி ஒன்றைப் புகைத்துக்கொண்டிருந்தார்.

புகை பிடித்த இடம் தவறானது எனக் கூறி, நீதிமன்றத்தினுள் புகை பிடித்ததினால் அபராதம் ரூ. 15 எனவும், அபராதம் கட்டத் தவறினால் ஒரு வார சிறை தண்டனை எனவும் நீதிபதி கூறினாராம்.

ஒரு பீடி புகைத்து, தன் சோர்வை 'நீக்கி'க்கொள்ள அந்த போலீஸ்காரர் 15 ரூபாய் செலவு செய்யவேண்டி ஏற்பட்டது பரிதாபத்திற்குரியதுதானே!

மலர் 2] சென்னை: மார்கழி 2உ வெள்ளி (17—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 3உ சனி (18—12—54) [இதழ் 160

# 'நஷ்ட ஈடு கொடுங்கள்; வெளியேறுகிறோம்'

## 'வெளியேறச் சொன்ன சர்க்காரைக் கேளுங்கள்'

—முதலாளிகள்

## 'வேலை வாங்கிய முதலாளிகளைக் கேளுங்கள்'

—அரசாங்கம்

## அரசாங்கம் - முதலாளிகள் கூட்டுச் சதி

*கொழும்பு துறைமுகத்தில் 2000-க்கு மேற்பட்ட திராவிடத் தொழிலாளர்கள் விம்மல்*

கொழும்பு, டிச. 16—

கொழும்பு துறைமுகத்தில் வேலை செய்துவரும் 2,000-க்கு மேற்பட்ட இந்திய மரபு தொழிலாளர்கள், இலங்கை குடியேற்றக் கட்டுப்பாடு அதிகாரியின் கட்டளைக் கொப்ப, கொழும்பை விட்டு வெளியேற முடியாது என மறுத்து விட்டனர்.

தாங்கள் பல ஆண்டு காலமாக வேலை செய்துள்ளதால், அதற்காகச் சேரவேண்டிய நஷ்டஈட்டுத் தொகை, உதவித் தொகை முதலியவைகளைக் கோருவதற்கு தங்களுக்கு உரிமை இருக்கிறது எனவும், அவைகளைப் பெருமல் வெறுங்கையுடன் தாய்நாடு செல்ல முடியாது எனவும் அவர்கள் தங்கள் மறுப்புக்குக் காரணம் காட்டுகின்றனர்.

*மேற்குறிப்பிட்ட காரணத்தை விளக்கிக் கூறி, தங்களை இதுவரை தொழிலுக்கு அமர்த்திக் கொண்டவர்களிடமிருந்து அத்தொகையைப் பெற்றுக் கொடுத்தால், தாங்கள் வெளியேறிவிடத் தயாராக இருப்பதாக, அவர்கள் அந்த அதிகாரிக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.*

*மேற்படி துறைமுகத்தில் கடந்த இருபது ஆண்டு காலமாகத் தாங்கள் வேலை செய்து வந்திருப்பதாகவும், தங்களுடைய தொழில் என்றென்றும் நிலையானது என்ற நம்பிக்கையில், தாங்கள் அதுவரை சம்பாதித்துப் பணம் அனைத்தையும் செலவழித்து விட்டதாகவும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். பாப்பர்களாகத் தாங்கள் இருப்பதுடன், தங்களில் பலர் சிறு சிறு கடன்காரர்களாக இருப்பதாகவும், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன் அக்கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது எனவும், அவர்கள் குறித்துள்ளார்கள்.*

"எங்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு இருந்தவர்களை நஷ்ட ஈடு கொடுக்கும்படி கேட்டால், 'நாங்கள் உங்களை வெளியேறச் சொல்லவில்லை. அரசாங்கந்தான் உங்களை வெளியேறச் சொல்லுகிறது; எனவே அரசாங்கத்தினரிடம் நஷ்டஈடு பெற்றுக்கொள்ளுங்கள்' என அவர்கள் கையை விரிக்கிறார்கள்."

ஆனால் அரசாங்கமோ, "நஷ்டஈடும் மற்ற உதவித் தொகையும் உங்களை வேலைக்கு வைத்துக் கொண்ட முதலாளிகள்தான் கொடுக்க வேண்டுமே அல்லாது அரசாங்கம் கொடுப்பது என்பது நியாயமல்ல" எனக் கூறுகிறது!

*இச்சிக்கலான பிரச்னை பைசல் செய்யப்படும் வரை சிலோனிலேயே தங்கி இருக்கும்படி தங்களை அனுமதிக்கும்படியாக, கட்டுப்பாடு அதிகாரிக்கு, மேற்படி தொழிலாளர்கள் விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர். அத்தொழிலாளர்கள் அனைவரும் இன்று சிலோனை விட்டு வெளியேற வேண்டியவர்களாவர்.*

## கடல் கொந்தளிப்பு

### தனுஷ்கோடியில் குடிசை வாழ்வோரின் துயரம்

*தனுஷ்கோடியில் தென் கடல் கொந்தளித்து நகருக்குள் கடல் தண்ணீர் வந்துவிட்டிருக்கிறது.*

*கடலோரத்தில் குடிசை கட்டி வாழ்ந்த பலர் தங்கள் குடிசைக்குள் கடல் நீர் முழங்கால் அளவு பாய்ந்திருந்ததினால் சமைத்து உண்ணவும் முடியாதவர்களாகிவிட்டனர்,*

## 'உறுதி மொழி தரமாட்டேன்!'

*புதுடில்லி, டிச. 16—*

*"வரும் 5 வருட காலத்திற்கு ரயில்வே கட்டணங்களையும், மற்றும் சாமான்களுக்கு விதிக்கப் படும் கட்டணங்களையும் உயர்த்த மாட்டோம் என்று உறுதி மொழி தந்து கட்டுப்படுத்திக் கொள்வதற்கில்லை; ரயில்வே போர்டு அவசியமென்று கருதினால் கட்டணம் உயர்த்தப்பட வேண்டியிருக்கலாம்,"*

*என்று, இரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.*

## தடையை எம். ஆர். இராதா மீறப்போகிறாராம்!

தனது இராமாயண நாடகத்திற்கு மதுரை, திருச்சி, கரூர் ஆ[illegible] இடங்களில் சர்க்கார் தடை விதித்திருப்பதை எதிர்த்து, தா[illegible] தடையை மீறப்போவதாக நீண்டதோர் அறிக்கை ஒன்றை தோழர் ராதா விடுத்துள்ளார். அதன் முக்கியப் பகுதி இது:—

"18—12—54-ந் தேதி சனிக்கிழமை மாலை திருச்சி முனிசிபல் தியேட்டர் முன்பு இராமாயணத் தோன்றி தடை உத்தரவை மீறுவதாக முடிவு செய்துவிட்டேன். இதில் என்னைத் தவிர வேறுயாரும் சம்பந்தப்படக்கூடாது."

அடையாள எதிர்ப்[illegible] இக்காரியத்தில் ஈ[illegible] கிறேன். ஆட்சியாள[illegible] தொல்லை கொடுப்பதற்காக அல்லவே அல்ல, என்பதை மீண்டும் தெரிவித்துக் கொண்டு உங்க[illegible]ருந்து விடை பெ[illegible] கொள்கிறேன்."

# 5,000 கிரேக்க மாணவர்களின் எழுச்சி

## சைப்ரஸ் பிரச்சினையில் ஐ. நா. முடிவின் எதிரொலி

## விடுதலைச் சின்னம் சுக்குநூறாக உடைக்கப்பட்டது

## அமெரிக்கத் தூதுவராலயமும் தூளாயிற்று

*பிரிட்டிஷ், அமெரிக்கக் கொடிகள் எரிக்கப்பட்டன!*

சலோனிகா, டிச. 16—

பிரிட்டிஷ் காலனியாயுள்ள சைப்ரஸிற்கு சுயநிர்ணய உரிமை தரவேண்டும் என்ற கிரேக்க நாட்டின் கோரிக்கைக்கு இனியும் தொடர்ந்து ஆதரவு தரக்கூடாது என்ற ஐ. நா. சபையின் அரசியல் கமிட்டியின் முடிவு ஆயிரக்கணக்கான கிரேக்க மாணவரிடையே பெரும் எழுச்சியைத் தூண்டிவிட்டு எதிரொலித்திருக்கிறது.

ஐயாயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் போலீசாரின் தடையையும் மீறி, அமெரிக்க தூதுவராலயக் கட்டிடத்தையும், செய்தி அறிவிப்பு நிலையத்தின் கதவுகளையும் உடைத்து சுக்கு நூறாக்கியிருக்கின்றனா; விடுதலைச் சின்னமொன்றும் உடைத்தெறியப் பட்டிருக்கிறது.

*மாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் 'யூனியன் ஜாக்' (பிரிட்டிஷ்) கொடியும் அமெரிக்கக் கொடியும் தீயிட்டுக் கொளுத்தப் பட்டிருக்கின்றன.*

*இந்தக் கலவரத்தின் விளைவாக பல போலீசார் உட்பட 40 பேருக்குமேல் காயமடைந்திருக்கின்றனர்.*

*பிரிட்டிஷ் தூதுவராலயத்திற்கும் மாணவர் படையெடுத்திருக்கின்றனர்.*

*அங்கு அவர்களின் 'தூதுக்குழு' ஒன்றுசென்று தூதுவரை சந்தித்து தூதுவராலய அதிகாரிகள் தங்களுக்குக் கோபமூட்டும்படி நடந்து கொள்வதாகப் புகார் செய்துவிட்டு வெளியேறினர் எனவும் தெரிகிறது.*

*சைப்ரஸ் பிரச்சினையில், துருக்கிய நாடு கிரேக்க நாட்டுடன் சிநேக முறையில் நடந்து கொள்ளாததை எதிர்க்கும் வகையில் துருக்கிய தூதுவராலயத்திற்கும் சென்று மாணவர்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர்.*

*சைப்ரசிலுள்ள கிகோசியா எனும் இடத்தில் உள்ள கிரேக்க மாணவர்கள் எல்லாரும் ஐ.நா.-வின் முடிவைக் கண்டிக்கும் வகையில் வகுப்புகளை விட்டு வெளியேறி "அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் ஒழிக! வீழ்க!" என ஒலி முழக்கம் எழுப்பியிருக்கின்றனர்.*

*அமெரிக்க தூதுவராலயம், செய்தி அறிவிப்பு அலுவலகம் இவையெல்லாம் சேதப்பட்டதைக் கண்டித்தும் நஷ்டஈடு கோரியும் வன்மையான கண்டனமொன்றை அமெரிக்கா எழுப்புமெனத் தெரிகிறது.*

# 25,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

## மத்திய இலங்கையில் தொழில் நிலைநின்றது

கொழும்பு, டிச. 16—

இலங்கையிலுள்ள பஸ்ஸாரா மாவட்டத்தில் உள்ள 20,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். இதனால் அந்த மாவட்டத்தில் தோட்டத் தொழில் நிலை நின்றுவிட்டது.

*டம்மேரிய 'ஹை பாரஸ்ட்' தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஆதரித்தே இவர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிகிறது.*

*வேலையிலிருந்து நீக்கப்பட்ட சில தொழிலாளர்களை திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதும் டம்மேரிய து[illegible]ப் பிரயோக சம்பவத்தில் ச[illegible]ப்பட்டதாகச் சொல்லப்படும் அதிகாரியை வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்பதும் அக்கோரிக்கைகளில் முக்கியமானவையாகும்.*

*இதையடுத்துள்ள பாடுல்லா மாவட்டத்திலும், தேயிலை தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் 5000 பேர் இதே மாதிரி அனுதாப வேலை நிறுத்தம் ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிகிறது.*

*வேலை நிறுத்தம் அமைதியாகவே நடைபெறுகிறதாம்.*

## புதுவையின் எதிர்காலம்

### பண்டிதர் தரும் உறுதிமொழி

*புதுடில்லி, டிச. 16—*

*"பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் சட்டபூர்வமான அதிகார மாற்றம் ஏற்பட்ட பிறகு அப்பகுதிகளின் எதிர்காலம் குறித்து அங்கு வாழும் மக்களைக் கலந்தாலோசித்து அவர்களின் சம்மதம் பெற்று முடிவு செய்யப்படும்,"*

*என, மக்கள் சபையில் நேரு மீண்டும் உறுதிமொழியளித்துள்ளார்.*

## காசியில் தீ விபத்து

### 1½ லட்சம் ரூபாய் சணல் சாம்பலாயிற்று

*காசி, டிச. 16—*

*இங்கு நேற்றிரவு சுமார் 10 மணிக்கு தீ விபத்தொன்று ஏற்பட்டு 5 சணல் கிடங்குகளுக்குப் பரவி ரூ. 1.5 லட்சம் சணலுக்கு சேதமுண்டாக்கி விட்டதாகத் தெரிகிறது.*

## புயல் வருகிறது!

*சென்னை, டிச. 16—*

*வங்காளக்குடாவின் தென்மேற்குப் பகுதியில் புயல் உருவாகியுள்ளது. அது இன்று மாலை 5-30 மணிக்கு காரைக்குத் தெற்கே 500 மைலில் இருந்தது என்றும், அது பலம்பெற்று வடமேற்கு திசை நோக்கி நகரக்கூடுமெனவும் வானிலை அறிக்கை கூறுகிறது.*

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை · 17—12—1954 வெள்ளி


# வரவேற்கிறோம்!

யூகோஸ்லேவிய நாட்டின் குடியரசுத் தலைவரான மார்ஷல் டிட்டோ இந்தியத் துணைக் கண்டத்திற்கு வருகை தந்துள்ளார்.

அவருக்கு அமோகமான வரவேற்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அவரது வருகையின் முக்கியத்துவம் குறித்து பல நாட்டு ராஜதந்திரிகளும் எண்ணிப் பார்க்கின்றனர்.

அவரும், 'நான் ஏன் இந்தியா வருகிறேன்,' என்பதை விளக்கிக் கூறியிருக்கிறார்.

டிட்டோ—'உலகப் பெரும் பணக்காரர்களிலே ஒருவரின் செல்வச் சீராளன் என்ற செல்வாக்கு, நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தந்த தலைவனின் ஏக வாரிசு என்ற உரிமை,'—என்பன போன்ற பின்னணி இன்றியே ஒரு நாட்டுக்குத் தலைவரானவர்.

'ஜோசிப் பிராஸ்' — அது தான் அவரது இயற் பெயர்; ஒரு சாதாரணக் குடிமகனாய், 'ஏர் கலப்பை'யில் வாழ்நாளை ஓட்டும் ஏழை விவசாயியின் மகனாய்ப் பிறந்தவர்.

செல்வச் சீமான்கள், 'குடித்து'விட்டு வீசி எறியும் கண்ணாடி டம்ளர்கள், கடித்துத் துப்பிய மாமிசத் துண்டுகள், புகை பிடித்துவிட்டு அணைக்காமல் போடும் 'சிகரெட்' துண்டுகள் — இவை போன்ற எச்சில் பண்டங்களைப் பொறுக்குவதும், மிச்சக் கோப்பைகளைக் கழுவுவதும், மேஜை துடைப்பதுமான 'ஓட்டல்' பணியாளராக இருந்தவர்; ஆம், தொழிலாளராயிருந்து விவசாயிகள் — பாட்டாளிகள் — தொழிலாளர்கள்-சாதாரண மக்கள் ஆகியவர்களின் துயர் துடைக்க, அயராது உழைத்து, அந்த நாட்டவரின் நல்வாழ்விற்காகப் படாத பாடுபட்டு, நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தந்து, இன்று அந்த நாட்டவரின் அன்பிற் குரியவராய், ஆதரவு பெற்றவராய், குடியரசு தலைவராய் வீற்றிருப்பவர், டிட்டோ!

அவர்தான் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்துள்ளார்.

"தான் இந்தியா வருவது ஏன் முக்கியமானது," என்று அவரே இரண்டொரு தினம் முன்பு குறிப்பிடுகையில், "இந்தியா அண்மையில்தான் சுதந்திரம் பெற்ற நாடு; 36 கோடி மக்களைக் கொண்ட பிரம்மாண்டமான நாடு; அங்குள்ள மக்களையும், அவர்களின் முன்னேற்றத்தையும் காண நான் ஆவல் கொண்டுள்ளேன்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மார்ஷல் டிட்டோவின் வருகை, இந்தியாவில் உள்ள அரசியல்வாதிகள் கூறுகிற மாதிரி, எந்த அளவு இன்று உலகில் நிலவும் அவநம்பிக்கையையும், குரோதத்தையும் ஒழித்து, சமாதானத்திற்கு வழி கோல உதவுமோ என்பது, பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

உலகம் இன்று இரு கூறுகளாய்—பொது உடைமை முகாம் என்றும் ஏகாதிபத்திய முகாம் எனவும்—பிரிந்து கிடக்கிறது. இவை இரண்டும் உலகின் பல்வேறு 'மூலை'களில் அவ்வப்போது முட்டி மோதிக் கொள்வதும், அந்த மோதுதலிலே யுத்தம் என்ற பேரிடியின் 'முழக்கம்' எழும்பி விடுமோ என்ற அச்சம் அவ்வப்போது உலக மக்களின் உள்ளத்தை உலுக்குவதுமாக இருந்துவருகிறது.

இரு முகாம்களும், 'உனக்கு நான் மட்டமா?' என்ற வகையில், ஆயுதப் பெருக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டே சமாதானம் பேசுவதையும் நாம் கண்டுதான் வருகிறோம்.

இந்த நிலையில், இரு முகாம்களும் ஒத்துவாழக்கூடும் என்று பலரும் கூறுகிறார்கள். மார்ஷல் டிட்டோவும் அவ்வாறே கூறியிருக்கிறார்.

இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் நேருவும், தமது வெளிநாட்டுக் கொள்கை வெற்றி பெற்று வருவதாகப் பறை சாற்றுகிற நேரத்திலேயே, உலகத்தில் உள்ள இரு 'முகாம்'களும், ஏககாலத்தில், சுமுகமாக வாழ தமது 'பஞ்ச—சீல'க் கொள்கையே சாலச் சிறந்தது என்று எடுத்துக் கூறி வருகிறாரல்லவா?

இந்தவகையில்—வேறுபட்ட அரசியல் அமைப்பு, மக்களின் வாழ்க்கைத் தரம், வாழ்வுமுறை இவற்றில் மகத்தான வேறுபாடுகள் இருப்பினும், உலகில் சமாதானம் நிலவச் செய்வதற்கான வழி காண்பதற்காக ஒரே பாதையில் நடைபோடுவதாகக் கூறும் பண்டிதரும் டிட்டோவும் சந்திக்கிறார்கள்; சந்திப்பதற்காக வந்துள்ளார் டிட்டோ.

அவரது வருகை அவர் ஆசைப்பட்டுள்ளபடி, இந்த நாட்டின் 'உண்மையான' நிலைகளைக் கண்டறிய அவருக்குப் பயன்படவும் வேண்டும் என்பதுதான் நமது ஆவல். அவரது வருகையின் பலனை பொறுத்துப் பார்ப்போம்.

பாட்டாளியாயிருந்து நாட்டுத் தலைவனாயிருக்கும் டிட்டோவின் இந்திய வருகையை நாமும் வரவேற்கிறோம்.

## உருக்கு தொழிற்சாலை

"இந்தியாவில் ஒரு உருக்குத் தொழிற்சாலை அமைப்பது பற்றிய ரஷ்யப் பிரேரணையில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது; பிரிட்டிஷாரின் பிரேரணை பூர்வாங்கக் கட்டத்தில் இருக்கிறது; இவை இரண்டையும் ஏற்றுக் கொள்வது சாத்தியமானதே," என்று பிரதமர் நேரு ராஜ்ய சபையில் தெரிவித்திருக்கிறார்.

## வெளியிடவில்லையாம்!

"இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே உள்ள தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான நேரடி பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க இந்திய சர்க்காரோ பாகிஸ்தான் சர்க்காரோ எவ்வித நிபந்தனையையும் வெளியிடவில்லை," என்று, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் நேரு கூறியிருக்கிறார்.

# டிச.17-விமான யுகம் தோன்றிய நாள்

**1903**, டிசம்பர் **17**-ந் தேதி அமெரிக்காவில் அதிசயம் ஒன்று நடைபெற்றது. மிகப்பெரிய பறவைபோன்ற ஒரு விசித்திர இயந்திரம் தரையினின்று மேலே கிளம்பியது. **59** செகண்டுகள் கழிந்தபின், **825** அடிக்கு அப்பால், அது தரையில் வந்து இறங்கியது. மனிதன் பறக்கப் படித்துவிட்டான். தரையிலும் தண்ணீரிலும் சென்றவன், வானிலும் செல்லும் காலம் பிறந்தது.

இந்த அதிசய நிகழ்ச்சிக்குக் காரணர் இருவர்—அவர்கள் இருவரும் சகோதரர்கள்—வில்பர் ரைட், ஆர்வில் ரைட் என்பன அவர்கள் பெயர்கள். எனவே, அவர்கள், 'ரைட் சகோதரர்கள்' எனப்படுகிறார்கள். அன்று, நான்கு முறை, அவர்கள் விமானம் தரையினின்று எழுந்தது; நான்காம் முறை, அது, வெற்றியை நிலைநாட்டியது. அந்த சகோதரர்கள் அன்று விமான யுகத்தைத் தோற்றுவித்துவிட்டார்கள்.

### உயர்தர விஞ்ஞானம் படித்தவர்கள் அல்ல!

அச்சகோதரர்கள், இதை ஒரு நாளில், ஒரு வாரத்தில், ஒரு மாதத்தில், ஒரு ஆண்டில் செய்து முடித்தது அன்று; இளமை முதல், பறக்க வேண்டுமென்னும் கனவு கண்டவர்கள்; 1896-ல், தங்கள் கனவை நனவாக்கத் தொடங்கினார்கள்; முறையாக உயர்தர விஞ்ஞானம் படித்தவர்கள் அல்லர்; அவர்கள் ஒரு சைக்கிள் கடை வைத்திருந்தவர்கள்; எனவே, இயந்திரம் பற்றிய 'பற்று' அவர்களுக்கு ஏற்பட்டது.

சிமித் ஸோனியன் கல்வி நிலையம் பறப்பது பற்றிய சிந்தனை நூல்களை அவர்களுக்கு வழங்கியது. அவற்றில் கண்டவாறு அச்சகோதரர்கள் செய்து பார்க்கத் தொடங்கினர்: விளையாட்டு 'கிளைடர்களும்' காற்றாடிகளும் செய்து பார்த்தனர்; பல ஆண்டுகள், தங்கள் ஓய்வு நேரத்திலெல்லாம் இந்தச் சோதனைகளை நடத்தினர்.

கிட்டிஹாக் என்னும் இடம், சோதனைகள் நடத்துவதற்குத் தகுதியான இடம் என்று கருதி, அங்கேயே அவர்கள் தங்கள் சோதனைகளைச் செய்து பார்த்தனர். அப்பிரதேசத்திலுள்ள கொசுக்கள், மூட்டைப் பூச்சிகள் தொல்லைகளையெல்லாம் அவர்கள் சிறிதும் பொருட்படுத்தாமல், கருமமே கண்ணாயிருந்து தங்கள் சோதனைகளை நடத்தினார்கள்.

பறவைகள் பறப்பதை அவர்கள் பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். பறவைகளைப் போலச் சிறகுகளை அடித்துத்தான் எந்த இயந்திரமும் பறக்க முடியும் என்று அக்காலத்தில் அறிஞர் ஒருவர் எழுதியிருந்தார். ஆனால் ரைட் சகோதரர்கள் செய்த கிளைடர்கள் அக்கருத்தைப் பொய்ப்பித்துவிட்டன.

### விளம்பரத்தை வெறுத்தார்கள்

அவர்கள், கிளைடரில் பல முறை பறந்து பார்த்து, அதற்குச் சிறகுகள் அமைத்து அதைச் செம்மையாக்கினர்; விளம்பரத்தை வெறுத்தனர்; படம் பிடித்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பவும் முடியாதென்றனர்.

சிறிய சிறகுகளைச் செய்து வைத்து, அவற்றைச் சோதித்துப் பார்ப்பதற்கு, காற்று 'டனல்' அமைத்துக் கொண்டார்கள். சிறகு வடிவங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைச் சொல்லக் கூடிய திறமை அவர்களுக்கு ஏற்பட்டது. உலகத்தில் அவர்களே அத்துறையில் நிபுணர்களானார்கள்.

அவர்களது விமானத்துக்கு எடை குறைந்ததும், வன்மை மிக்கதுமான பெட்ரோல் எஞ்சின் வேண்டியிருந்தது. பல கம்பெனிகளைக் கேட்டுப் பார்த்தார்கள்; ஒருவரும் செய்து கொடுப்பதாக இல்லை. ஆதலால் அவர்கள் 12 'குதிரைத் திறன்' உள்ள எஞ்சின் ஒன்றைச் செய்து முடித்தார்கள்; உடனே தங்கள் விமானத்தைப் பறக்கவிட வேண்டுமென்று விரும்பினர்; ஆனால், ஒரு நாளைக்கு எஞ்சின் தகராறு ஏறபடும்; இன்னொரு நாள் காற்று நிலை சரியாயிராது; இப்படியாக அதைப் பறக்கவிடப் பல நாட்கள் ஆயிற்று. ஒருமுறை எல்லாம் சரியாயிருந்தது; ஆனால் புயற் காற்று வந்துவிட்டது.

### அயராத உழைப்பால் வெற்றி மேல் வெற்றி

**ரைட் சகோதரர்கள், தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை; அவர்கள் அயராது உழைத்து, நல்ல எஞ்சின் அமைத்துவிட்டார்கள். 1903-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந் தேதி, பறக்க வேண்டுமென்று அவர்கள் துணிந்துவிட்டனர். அன்று காலை 10-30 மணியிலிருந்து மத்தியானம் வரையும் நான்கு முறை அவர்கள் பறந்தார்கள். நான்காவது முறை அவர்கள் வெற்றி கண்டார்கள். விமான யுகம் பிறந்துவிட்டது.**

அந்தச் சகோதரர்கள், வெற்றி மேல் வெற்றி காண்பாராயினர். 1905 அக்டோபரில் முதன் முறையாக 38 நிமிடம் 3 செக்கண்டில் வட்டமாக $24\frac{1}{2}$ மைல் பறந்தார்கள். 1906, மே 22-ல் அவர்களது விமானத்தின் 'பேட்டன்ட்' பதிவு செய்யப்பட்டது. 1908ல், அமெரிக்க இராணுவ இலாகாவுக்கு அவர்கள் ஒரு விமானம் செய்தார்கள். அடுத்த ஆண்டில், அந்த விமானம் இராணுவ உபயோகத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1909-ல், விமானங்கள் செய்வதற்கு ரைட் கம்பெனி என்னும் ஒன்றை அவர்கள் அமைத்தார்கள்.

வில்பர் ரைட் 1912 மே மாதம் விஷக் காய்ச்சல் கண்டு இறந்தார்; ஆனால், அவருடைய சகோதரர் ஆர்வில் ரைட் இன்னும் சிறிது காலம் வாழ்ந்து, தாம் தோற்றுவித்த விமானம், பல்வகை முன்னேற்றங்களை அடைந்ததைக் கண்டு களித்தார்.

## குஷ்டரோகத்துக்கு ஊசி மருந்து

வாஷிங்டன், டிச. 16—

குஷ்டரோகத்தைத் தடுக்கவும், தீர்க்கவும் கூடிய ஊசி மருந்து ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்த மருந்து, உறுதியாய் நோய் தீர்க்கும் என்பதை நிலைநாட்டுவதற்கு இன்னும் நான்கு ஐந்து ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ய வேண்டியுள்ளதாம்.

## தி.கொ.த.நா.காங்கிரஸ் மீதுள்ள வழக்குகள்

### சுப்ரீம் கோர்ட்டிற்கு மனு?

திருவாங்கூர் — தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வழக்குகள் சம்பந்தமாக தலைமை உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டன என்றும், இத்திங்கள் 20-ந் தேதிக்குள்ளாகவே மனு தாக்கல் செய்யப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

"காங்கிரஸ் கட்சி ஒன்றைத் தவிர மற்ற எந்தக் கட்சியுடனும் திரு—த. நா. காங்கிரஸ் சமரச ஏற்பாட்டுக்குத் தயாராயில்லை," என்று, தி. த. நா. கா. பிரமுகரான ஏ. நேசமணி எம். பி., அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## தென்னிந்தியாவுக்கு சலுகையாம்!

புதுடில்லி, டிச. 15—

கரும்பு இல்லாத காரணத்தால் வடஇந்தியாவில் உள்ள 25 சர்க்கரை ஆலைகள் தற்போது தூங்குவதாக உணவிலாக்கா உதவி மந்திரி திரு. கிருஷ்ணப்பா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தியை நாலரை லட்சம் டன்னாக அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், புது சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பது சம்பந்தமாக தென்னிந்தியாவிலிருந்து வரும் மனுக்களுக்கு சலுகை காட்டுவதே சர்க்காரின் கொள்கையாகும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## அவர்கள் முடிவு!

கராச்சி, டிச. 15—

மாநில கவர்னர்கள், ராஜப்பிரமுகர்கள், மாநில முதன் மந்திரிகள் ஆகியோரடங்கிய மாநாடொன்று இங்கு நடைபெற்றபோது, மேற்கு பாகிஸ்தானை ஒரே மாநிலமாக அமைக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. மேற்கு பாகிஸ்தான் ஒரே மாநிலமாக ஆக்கப்பட்ட பின்னர், அதற்கான நிர்வாக அமைப்புகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை ஆராய்வதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

## நாணய மாற்றம்

### புதுவையில் ஜரூராய் நடைபெறுகிறது

புதுடில்லி, டிச. 15—

இம்பீரியல் பாங்கியின் புதுவைக் கிளையில் நவம்பர் 2-ந் தேதி முதல் இதுவரை ரூ. 27 லட்சம் மதிப்புள்ள பிரெஞ்சிந்திய நோட்டுகள் இந்திய கரன்சி நோட்டுகளாக மாற்றப்பட்டுள்ளன. இன்னும் மாற்றப்பட வேண்டியிருக்கும் பிரெஞ்சிந்திய நோட்டுகளின் தொகை ரூ. 10 லட்சத்திற்கு மேலிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

## விஞ்ஞானிகள் மாநாடு

### இந்தியாவில் நடைபெறும்

பரோடா, (பம்பாய்) டிச. 16—

இங்கு ஜனவரி 4-ந் தேதி முதல் ஒரு வாரத்திற்கு நடக்கவிருக்கும் இந்திய விஞ்ஞானக் காங்கிரசின் 42-வது ஆண்டுக் கூட்டத்துக்கு அமெரிக்காவிலிருந்து பிரபல விஞ்ஞானிகள் இருவர் வருகிறார்கள்.

பிரதமர் நேரு அந்த ஒருவார மாநாட்டைத் தொடங்கி வைக்கிறார். அதற்கு உலகெங்குமிருந்து சிறந்த விஞ்ஞானிகள் 45 பேர் வருவார்கள் எனத் தெரிகிறது; இந்திய விஞ்ஞானிகளும் தொழிலதிபர்களுமாக 1,500 பேர் அங்கு கூடுவர். இந்தியாவில் ரேடியோ ஆராய்ச்சியை முதன் முதல் தொடங்கியவருள் ஒருவரும் கல்கத்தா பல்கலைக் கழகப் பேராசிரியருமான டாக்டர் கே. மித்ரா இம் மாநாட்டுக்குத் தலைமை தாங்குவார்.

விஞ்ஞானத்தை விசேடமாகப் படித்தவர்களுக்கே விளங்கும் சொற்பொழிவுகளும் விவாதங்களும் நடப்பதுமன்றி, விஞ்ஞானத்தைப் பற்றி பொது மக்கள் புரிந்து கொள்ளத்தக்க சொற்பொழிவுகளும் நிகழும். இந்திய விஞ்ஞானிகளும், அந்நிய விஞ்ஞானிகளும் இவற்றில் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

தொழில், வைத்தியம், விவசாயம், விஞ்ஞானம், மின்சார உற்பத்தி முதலிய துறைகளில் அணு சக்தியின் பயனைப் பற்றி ஆராயும் விவாதம் ஒன்றும் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# நில விநியோகம்: துரிதமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்

## சென்னை சட்டசபையில் அமைச்சர் அறிவிப்பு

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர் தாலுகாவில் விவசாயத்திற்கான புறம்போக்கு நிலங்களை வழங்குவதைத் துரிதமாக்க, அங்கு அதிகமான அதிகாரிகள்—ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள், மற்றும் இதர சிப்பந்திகள்—ஆகியோரை நியமித்துள்ளனரென்றும், நிலங்களை விநியோகம் செய்யும் வேலை விரைவிலேயே ஆரம்பிக்கப்படுமென்றும் சென்னை சட்டசபையில், கேள்விகளுக்குப் பதில் கூறுகையில், ரெவினியூ அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரி திங்கள் இறுதிக்குள்ளாகவே நிலங்கள் விநியோகம் செய்யப்பட்டு விடும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும், நிலம் வழங்குவதில், முதல் முதலாக நிலத்தைச் சாகுபடி செய்து கொண்டிருப்பவர்களுக்கும் அடுத்தாற்போல், நிலமுள்ள இடங்களைச் சேர்ந்துள்ள கிராமத்தவர்கட்கும், அருகாமையிலுள்ளவர்கட்கும், அதற்கும் அடுத்ததாக அருகில் சுற்றுப்புறங்களிலுள்ளவர்கட்குமாகச் சலுகைகள் காட்டப்படும் என்று தெரிவித்தார்.

### ஒன்றுமில்லை

சென்னை பாசன வேலைச் சட்டத்தின் கீழ் 1953-ம் வருடத்திலிருந்து எந்த ஒரு குளம், ஏரி எவையும், பழுது பார்க்கப்படவோ, அபிவிருத்தி செய்யப்படவோ, புதிதாகக் கட்டப்படவோ இல்லை என்று மந்திரி மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

### தொத்துநோய்த் தடுப்பு

தென்னூற்காடு மாவட்டத்தில், குஷ்டரோக நோய் தடுப்புக்கும், சிகிச்சைக்குமாக பெரும் அளவில் வேகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன வென்றும், அங்கு 44 மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன வென்றும் ஒரு விசேட ஆராய்ச்சி சிகிச்சை நிறுவனமொன்றை மத்திய சர்க்கார் முதன் முதலாக தென்னூற்காடு மாவட்டத்தில் தோற்றுவித்துள்ளனர் என்றும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சுகாதார மந்திரி கூறியிருக்கிறார்.

### ஆயுத போலீஸ்

திருச்சிமாவட்டத்திலுள்ள தீரர் கிராமத்தில் கடந்த செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 8 வரை ஆயுதப் போலீசார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது உண்மைதான் என்றும், வாரம் குறித்து விவசாயிகள், மிராசுதாரர்களிடையே தகராறு ஏற்பட்டிருந்ததே இதற்குக் காரணம் என்றும், இதற்காகச் செலவான ரூ. 136—8—0 என்றும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் நிதி மந்திரி கூறியிருக்கிறார்.

### மரணம் இயற்கையே

காரைக்குடியில் கடந்த அக். 24-ந் தேதியன்று போலீஸ் பாதுகாப்பிலிருந்தபோது திரு. சச்சிதானந்த வைத்தியர் என்பவர் மரணமடைந்தது உண்மைதானென்றும், விசாரணையின்போது மரணம் இயற்கையாகவே சம்பவித்தது என்றும் மந்திரி சுப்ரமணியம் தெரிவித்திருக்கிறார்.

### நிதி ஒதுக்கவில்லை

சென்னையில் சேரிகள் அபிவிருத்திக்கு (நில உரிமையாக்கும் சட்டத்தின் கீழ்) தனிப்பட்ட சேரிகளை வாங்கும் திட்டங்களுக்காக 1954—55-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி எதுவும் ஒதுக்கப்படுவதில்லை என்று கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் சுகாதார மந்திரி தெரிவித்திருக்கிறார்.

நில உரிமை பற்றி முடிவு காணப்பட்ட பின்னரே நிதி ஒதுக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

### இல்லை......!

சென்னை சேரி அபிவிருத்திச் சட்டத்தை மதுரை, கோவை, திருச்சி நகரங்களுக்கும் விரிவு படுத்துவது 'பற்றி சர்க்கார் திட்டமிட்டுள்ளதா என்று கேட்கப்பட்ட போது இல்லை என்று பதிலளித்தார் மந்திரி.

### அகதிகளுக்குச் சலுகை

பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்துள்ள அகதிகளில் எத்தனை பேர் கல்வி வசதி பெறுகின்றனர் என்பது பற்றித் தகவல் இல்லை என்றும், ஆனால், 1953—54-ல் பாகிஸ்தான் அகதிகள் 43 பேர் கல்விச் சலுகை பெற்றனர் என்றும் இதற்காக ரூ. 7167—6—0 செலவானதில் இந்திய சர்க்கார் ரூ. 7000 மானியமாகத் தந்தனர் என்றும் கல்வி மந்திரி சுப்ரமணியம் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

### கைவிடப்பட்ட காரணம்

சுயமரியாதை முறைப்படி நடைபெற்ற திருமணங்களை செல்லுபடியாக்கும் மசோதாவைக் கொண்டு வர இருந்த உத்தேசத்தை சர்க்கார் கைவிட்டு விட்டதென்றும், மக்கள் சபை நிறைவேற்றியுள்ள திருமண மசோதா, சென்னை மசோதாவிற்கு அவசியமில்லாது செய்து விட்டதாகவும், சட்ட சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி சுப்ரமணியம் தெரிவித்தார். சட்டம் வருவதற்கு முன்பு செய்யப்பட்ட திருமணங்களைச் செல்லுபடியாக்கச் செய்ய மக்கள் சபைச் சட்டம் பயன்படுமா என்று கேட்கப்பட்டபோது அப்படித்தான் தெரிகிறது என்று பதிலளித்தார் மந்திரி.

### நிராகரிப்பு

"தமது கடிதங்கள் விசேட போலீஸ் அதிகாரிகளால் பிரிக்கப்பட்டு வாசித்த பின்னரே தமக்கு வந்து சேருகிறது" என்று, தோழர் எம். கலியாணசுந்தரம் அவர்கள் ஒரு உரிமைப்பிரச்னையை சட்டசபையில் எழுப்பினரல்லவா? அதுபற்றி முடிவு கூறுகையில், சபாநாயகர் (காமன்ஸ்) பொதுச் சபையில் இதுபோன்ற பிரரேபணைகள் எதுவும் இல்லாததால், ஆஸ்திரேலியா பார்லிமெண்டு நடவடிக்கையில் ஒரு முன் மாதிரியான தீர்ப்பைத் தாம் கண்டு பிடித்ததாகக் கூறிவிட்டு, 'சென்சார்கள் சபை உறுப்பினர்களின் கடிதத்தைத் திறப்பது உரிமையை பாதிப்பதாகாது' என்று கூறினர்.

## லஞ்சம் வாங்கிய அதிகாரிகள்

### வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்

சென்னை ரெவினியூ இலாகாவைச் சேர்ந்த ஒரு குமாஸ்தா, மதுவிலக்கு இலாகாவைச் சேர்ந்த ஒரு அதிகாரி, ஆறு மதுவிலக்குப் பாதுகாவலர்கள், ஒரு போலீஸ்கான்ஸ்டபிள் ஆக ஒன்பது பேர் லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, இவ்வாண்டு அக்டோபர் திங்களில் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்று தெரியவருகிறது.

### மாநிலம் முழுவதும் பி. சி. ஜி. ஊசி போடப்படுமாம்!

"சென்னை மாநிலம் முழுதும் கூடிய விரைவில் பி. சி. ஜி. ஊசி போடும் இயக்கம் ஆரம்பிக்கப்படும்," என்று நிதியமைச்சர் சுப்ரமணியம் தெரிவித்திருக்கிறார்.

க்ஷயரோகத்தை தடுக்க செய்யப்படும் இம்முயற்சியில் 'டாக்டர்'கள் முழுமனதுடன் உதவி செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## நிபுணர்கள் வருகின்றனர்

இந்தியாவின் தொழில் வளம் பெருகவும் பருத்தி சாகுபடி அதிகரிக்கவும் ஆலோசனை கூற பிரிட்டிஷ் நிபுணர்கள் இங்கு வருகிறார்கள். இவர்கள் சுமார் மூன்று மாதகாலம் இந்தியாவில் தங்குவார்கள்.

தொழில் இயல் நிபுணர் திரு. டேவிஸ் டெஸ்மண்டு, கொழும்புத் திட்ட தொழில் உதவி ஏற்பாட்டுப்படி, இந்திய சர்க்காரின் ஆலோசகராகப் பணியாற்றுவார். அவர், தரம், உற்பத்தி, அகவிலை ஆகியவற்றைக் கவனித்து, புள்ளி விவர நிபுணர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட ஆவன செய்வார்.

* * *

### பிராண்ட் பிரபு இந்தியா வருகிறார்

நிதி—பொருளாதார நிபுணரும், பிரபல பாங்கிகளின் டைரக்டருமான பிராண்ட் பிரபு தொழில் அலுவலாக அடுத்த மாதம் இந்தியாவுக்கு வருகிறார்.

* * *

### பிரிட்டிஷ் வைத்தியக் குழுவும் வருகிறது

சுகாதார மந்திரி திருமதி ராஜகுமாரி அமிர்த கௌரியின் விருப்பத்திற்கிணங்கி வைத்திய ஆசிரியர்கள் குழு ஒன்றை இந்தியாவுக்கு அனுப்ப பிரிட்டிஷ் சர்க்கார் நிச்சயித்திருக்கிறது. இக்குழுவினர் இந்தியாவில் சுமார் இரண்டரை மாத காலம் தங்கி, பல இடங்களில் சொற்பொழிவுகளாற்றுவர்.

* * *

### கால் பந்து நிபுணரும் இந்தியா வருகிறார்

இந்திய இராணுவ வீரர்களுக்கு கால்பந்து விளையாட்டில் பயிற்சி தருவதற்கு, லண்டனைச் சேர்ந்த திரு. டெனிஸ் நெவிலி போதகாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

* * *

### வாணிப மந்திரி வருகிறார்!

இந்தியா—பாகிஸ்தான் நாடுகளின் தொழில்—வாணிப முன்னேற்றத்தை நேரில் அறிந்து கொள்வதற்காக பிரிட்டிஷ் ராஜாங்க மந்திரி திரு. ஏ. ஆர். டபிள்யூ. லோ, 4-1-55ல், டில்லி வந்து சேர்வார். இந்தியாவிலுள்ள முக்கியமான வர்த்தக நகரங்களுக்குச் செல்வதுடன் வர்த்தக—பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி சம்பந்தப்பட்ட மந்திரிகளையும் கலந்தாலோசிப்பார்.

## எவ்வளவு?

"இந்தியாவிலிருக்கிற கிருத்துவக் கோயில்கள் (மிஷினரி) 1950—54 ஆகிய நான்காண்டுகளில் 29.24 கோடி ரூபாய் வெளி நாடுகளிலிருந்து பெற்றுள்ளன,"

என்று, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், ரெவினியூ செலவினங்கள் அமைச்சர் ஷா தெரிவித்திருக்கிறார்.

## இலங்கையில் டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகம்

கொழும்பு இந்து கல்லூரியின் தமிழ்த் துறை வளர்ச்சி நிதிக்காக இருபது நாடகங்களை நடத்த ஒப்புக்கொண்டு, டி. கே. எஸ். சகோதரர்கள் தங்கள் நாடகக் குழுவினருடனும், காட்சி அமைப்புகளுடனும் 23—12—54 காலை விமானத்தில் இலங்கைக்குப் பயணமாகிறார்கள்.

இந்துக் கல்லூரி மண்டபத்திலுள்ள நாடக அரங்கில், 25—12—54 முதல் — ஔவையார், மனிதன், கள்வனின் காதலி, ரத்தபாசம், அந்தமான் கைதி, இன்ஸ்பெக்டர், எது வாழ்வு — ஆகிய நாடகங்கள் நடைபெறுமென்றும், டி. கே. எஸ். சகோதரர்கள் இலங்கை பயணத்தை முடித்துக்கொண்டு பிப்ரவரி முதல் வாரத்தில் சென்னைக்குத் திரும்புவார்கள் என்றும் தெரிகிறது.

## கருணை காட்டுங்கள்!

### எகிப்திய பிரதமருக்கு பிரிட்டிஷ் தொழிற் கட்சி எம். பி.-க்கள் வேண்டுகோள்

எகிப்தில் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தார்மீது தொடரப்பட்டுள்ள சதி வழக்கு விசாரணைகளில் சற்று இரக்க சிந்தையுடன் நடந்துகொள்ளுமாறு பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த ஆறு மக்கள் சபை உறுப்பினர்கள், எகிப்தியப் பிரதமர் கர்னல் நாசருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தெரிகிறது.

பென்னர் பிராக்வே என்ற மற்றொரு தொழிற் கட்சி உறுப்பினர், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத் தோழர்கள்மீது கருணை காட்டுமாறு கோரி அனுப்பிய தந்தியையும், அவர்கள் ஆதரித்திருக்கின்றனராம்.

## இந்தியா - ஈரான் வர்த்தக ஒப்பந்தம்

டெஹ்ரான், டிச. 15—

இந்தியாவில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் ஈரானிலும், ஈரானில் உள்ளவை இந்தியாவிலும் இயங்க அனுமதிக்கிற வர்த்தகக் கப்பல் போக்கு வரத்துக்கான ஒப்பந்தம் ஒன்று, இரு நாடுகளுக்கு மிடையே இன்று கையெழுத்தாகியுள்ளதாகத் தெரிகிறது.

இந்த ஒப்பந்தம், வர்த்தக நிறுவனங்கள், சொத்துப் பாதுகாப்பு, பட்டுவாடா போன்ற விஷயங்களில் இரு நாட்டு மக்களின் உரிமைகளையும், கடமைகளையும் பரஸ்பர அடிப்படையில் சீர்செய்கிறது.

சுங்கவரி விதிப்பு, ஏற்றுமதி முதலியவற்றில் நிரம்ப சலுகைகள் காட்டப்படுமாம்.

இரு நாடுகளிடையேயும், கப்பல் போக்குவரத்துக்கான வசதிகளையும் அமைத்துக்கொள்ளவும் ஒப்பந்தம் வழி தருகிறது.

## பண்டிதருக்கு பாக். பிரதமர் அழைப்பு

கராச்சி, டிச. 15—

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிடையேயும் முடிவு காணப் பெருமலிருக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்த கராச்சி வருமாறு பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி, இந்தியப் பிரதமர் நேருவுக்கு அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

பண்டித நேரு, அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஆசிய - ஆப்பிரிக்க மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு, இம்மாத இறுதியில் ஜகார்தா செல்லவிருக்கிறார். ஒரு வாரகாலம் கழித்து இந்தியா திரும்பும் அவர் லண்டனில் ஜனவரி இறுதியில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளவும் வேண்டியிருப்பதால், அடுத்த மாதத்தில் (ஜனவரியில்) கராச்சி செல்வது கடினமாயிருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

என்றாலும், அழைப்புக்கு முக்கியத்துவம் தந்து கவனிப்பதாக, இந்தியாவிலுள்ள பாக். தூதுவரிடம் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறாராம்.

இதற்கிடையில், ஜகார்தாவிலும், லண்டனிலும் இரு நாட்டுப் பிரதமர்களும் பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தக் கூடும் என்றும், அந்தப் பேச்சுவார்த்தைகள் அமையும் சுமுகமான சூழ்நிலையைப் பொறுத்துத்தான், இந்தியப் பிரதமர் நேரு பாக். பிரதமரின் அழைப்பை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் முடிவெடுக்கப்படும் எனவும் தெரிகிறது.

இந்தியாவில் எரி சாராய உற்பத்தி 1950—51-ல் 47·2 லட்சம் காலனாக இருந்தது, 1953—54-ல் மொத்தம் 88 லட்சம் காலனாக அதிகரித்திருக்கிறது.

## செய்திச் சுருள்

### புனா—கர்கி தமிழர் கழகம்

13—12—54ல், சென்னை சர்க்காரின் புதிய நாடக சட்டத் திருத்த மசோதாவைக் கைவிடும்படி கோரிக்கொண்டு சென்னை முதல் மந்திரிக்கு தந்தி ஒன்று அனுப்பியுள்ளனர்.

### நெல்லிக்குப்பம் வள்ளுவர் மன்ற 3வது ஆண்டு விழா

12—12—54 பிற்பகல் 3 மணியளவில், திரு. என். ராபர்ட் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆண்டு விழாவில், தோழர் சுப்பிரமணியன் ஆண்டறிக்கை வாசித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின்னர், தோழர்கள் என். வரதப்பன், புலவர் மயிலாசனம், அடிகளார்—சுவாமிநாதன், க. அன்பழகன், திருக்குறளார் முனுசாமி ஆகியோர் 'குறள் நெறி' பற்றியும், 'வள்ளுவர் கண்ட உலகம்' என்பது பற்றியும் விரிவுரையாற்றினர்.

### ஆம்பூர் திருவள்ளுவர் கழகத் திறப்பு விழா

12—12—54 காலை 10½ மணியளவில், தோழர் ஆ. மா. சிவஞானம் தலைமையில் மேற்படி கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தலைவர் தமது உரையில் திருக்குறளின் சிறப்பை விளக்கிப் பேசினர். பின்னர் தோழர் எம். டி. பழனி மகாதேவன் திருவள்ளுவருடைய கருத்துக்களை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

### வாழ்த்தும்—வழியனுப்பும்

தர்மபுரி கே. ரத்னு மோட்டார் சர்வீசின் உரிமையாளர் திரு. பி. அப்பாவு அவர்களின் மூத்த மகன் தோழர் விமலன் அவர்கள், பொறியியற் கல்வி பயில்வதற்காக இங்கிலாந்து செல்வதையொட்டி, மேற்படி கம்பெனி அலுவலகத்தினரும், தணிக்கையாளர்களும் அன்னாரைப் பாராட்டி 13—12—54 மாலை 5 மணிக்கு தர்மபுரி விவேகானந்தா நகர மாளிகையில் தேநீர் விருந்து நடத்தினர். வழியனுப்பும் பாராட்டுக் கூட்டத்திற்கு திரு. டி. ஏ. எம். சுப்பிரமணியம் தலைமை தாங்கினர். தலைவர் தமதுஉரையில் அவரைப் பாராட்டு முகத்தான், அவர், தமிழகம் வியக்கத் தக்க முறையில் ஒரு பேரறிஞராக வரவேண்டும் என்று வாழ்த்தினர். திரு. இரா. சகநாதன் அவர்கள் கம்பெனியின் சார்பில் வாழ்த்திதழ் ஒன்று படித்தளித்தார். மேலும் பல தோழர்கள் தங்கள் வாழ்த்துக்களைக் கூறினர். இரவு 8½ மணிக்கு, மேற்படி கம்பெனி தொழிற்சாலையில், டிரைவர்கள், கண்டக்டர்கள், புக்கிங் கிளார்க்குகள், ஒர்க் ஷாப் தொழிலாளர் ஆகியோர் அவருக்கு விருந்தொன்று நடத்தினர். டாக்டர் ஈஸ்வரன் தலைமையில் வழியனுப்பும் பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றபோது, கம்பெனி தொழிலாளர்கள்சார்பில் தோழர் உசேன் அவர்கள் வாழ்த்திதழ் படித்தளித்தார். மற்றும் பலரும் தங்கள் வாழ்த்துக்களைக் கூறினர்.

### அனுதாபம்

சென்னை வண்ணாரப்பேட்டை, எம். சி. சாலை, எண் 72-லுள்ள கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் நிர்வாகியான தோழர் சி, இராசகோபால் அவர்களின் மகள் சத்தியவாணி 15-12-54-ல் இயற்கையெய்தியமைக்கு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாக மேற்படி படிப்பகச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

5—12—54 மாலை 7½ மணிக்கு, பம்பாயில், திரு. ஏ. பி. கே. பக்கீர் மைதீன் தலைமையில் நடைபெற்ற பம்பாய் தமிழ் முஸ்லிம் சங்கத்தின் அவசரக் கூட்டத்தில், பம்பாய் கவர்னர் கிரிஜா சங்கர் பாஜ்பாய் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

# பம்பாய் வந்தடைந்த மார்ஷல் டிட்டோ

## கிராம மக்களுடன் கைகுலுக்கினுர்

## மகத்தான வரவேற்பும் கவர்னரின் விருந்தும்

சூரத், டிச. 16—

யூகோஸ்லேவிய குடியரசுத் தலைவர் இன்று இந்தியா வந்து சேர்ந்தார்.

அவர், பம்பாயிலிருந்து, டில்லிக்கு விசேஷ புகை வண்டி ஒன்றில் பயணமானர்.

பம்பாயிலிருந்து புறப்பட்ட அந்த விசேஷ இரயில் தானு என்ற ஒரு சிறு இரயில் நிலையத்தில் நின்றது.

உடன், மார்ஷல் டிட்டோ வண்டியை விட்டு இறங்கி அங்கு அவரைக் காண கூடியிருந்த கிராம மக்களைக் கண்டு அவர்களுடன் கைகுலுக்கி அவர்களை மகிழ்வித்தார்.

கிராம மக்களும் பெயர்பெற்ற தானு ரோஜா மலர்களாலான மாலை ஒன்றை அவருக்குப் பரிசாக அளித்தனர். சாதாரண கிராம மக்களிடம் அவர் அவ்வளவு ஒன்றிப் பழகியது பலரையும் ஆச்சரியத்திலாழ்த்தியதாம்.

மார்ஷல் டிட்டோவும் இன்னும் யூகோ குடியரசின் உதவித் தலைவர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் கப்பல் மூலம் பம்பாய் வந்தடைந்தனர்.

பம்பாயில் அவருக்கு குதூகலமான வரவேற்புத் தரப்பட்டது

பம்பாய் கவர்னர், முதன் மந்திரி இன்னும் இந்தியக் குடியரசுத் தலைவர், ராணுவக் காரியதரிசி ஆகியோர் அவரை வரவேற்றனர்.

பம்பாய் கவர்னர், டிட்டோவுக்கு ஒரு விருந்துபசாரம் நடத்தினர்.

இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் பெற்றபின் வெளிநாடு ஒன்றின் அரசியல் தலைவர் வருகை இதுவே முதன் முறையாகும்.

பம்பாயில் தாம் சிலமணி நேரமே இருந்தபோதிலும், பம்பாய் தமக்கு மிகவும் பிடித்துவிட்டதாகவே அவர் கூறினாராம்.

# காங்கிரஸ் தயவிற்கு இறுதி வரை முயற்சித்தாராம்!

## பதவியைவிட்டு விலகுவதுபற்றி நிருபர்களிடம் பட்டம் தாணுவின் ஒப்பாரி

திருவனந்தபுரம்—

"சட்டசபை கூடி தீர்மானிக்கப்படுகிறவரை, நாங்கள் இராஜினுமாச் செய்வது குறித்து யோசிக்கப்போவதில்லை."

"காங்கிரஸ், தான் காட்டிவந்த ஆதரவை நிறுத்திக் கொண்டதால் சர்க்கார் நிர்வாகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை."

"காங்கிரசுடன் சமரசம் செய்துகோள்ள நான் கடைசி நிமிடம் வரை முயற்சி செய்தும் அது பலிக்கவில்லை."

இவ்வாறு, தி. கொ. முதலமைச்சர் பட்டம் தாணு, பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

பத்திரிகை நிருபர்களது சில கேள்விகளையும், அவற்றிற்குப் பட்டம் தந்துள்ள பதில்களையும் கீழே தந்துள்ளோம்:—

கேள்வி: சட்டசபையில் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரும் உத்தேசம் உண்டா?

பதில்: அதற்கு அவசியமிருப்பதாகத் தோன்றவில்லை. பிரதேச காங்கிரஸ் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் இராஜினுமா செய்யும் உத்தேசம் இல்லை.

கே: காங்கிரஸ் கட்சி, பி. சோ. கட்சிக்கு ஆதரவளிப்பதாக ராஜப் பிரமுகருக்கு எழுத்து மூலம் உறுதியளித்ததால்தான் பி. சோ. கட்சி மந்திரிசபை அமைக்க முடிந்தது; இப்போது காங்கிரஸ், பி. சோ. கட்சிக்கு அளித்துவந்த ஆதரவை நிறுத்திவிட்டதால் மந்திரிசபை இராஜினுமா செய்ய வேண்டுமல்லவா?

ப: அது மந்திரிசபை அமைக்கப்படுவதற்கு முன்பிருந்த நிலை. தற்போது மந்திரிசபை அமைத்துவிட்டதால், அதுபற்றி சட்டசபைதான் முடிவு செய்ய வேண்டும்.

கே: இதர கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்கிறீர்களா?

ப: அதெல்லாம் சட்டசபையில்தான் தெரியும்.

கே: காங்கிரஸ் தனது ஆதரவை திரும்பப் பெற்றுக்கொண்டால் உடன் இராஜினுமாச் செய்துவிடுவதாக நீங்களே கூறியிருக்கிறீர்கள் அல்லவா?

ப: அது சட்டசபையில் அல்லவா தெரியவரும்?

கே: முன்பு காங்கிரஸ் கட்சி அதிகாரத்திலிருந்தபோது 'சிறுபான்மை கட்சி ஆட்சி பீடத்திலிருக்கக் கூடாது,' என்று நீங்கள் கூறவில்லையா?

ப: தற்போதுள்ள மந்திரி சபைக்கு ஆதரவில்லை என்பதை சட்டசபைதான் முடிவு செய்ய வேண்டும்.

கே: காங்கிரசின் தீர்மானம், தங்களுக்கு அதிகாரபூர்வமாகக் கிடைத்து விட்டதா?

ப: அதை எனக்கு ஏன் அவர்கள் அனுப்பப் போகிறர்கள்?

இவ்வாறு கூறிவிட்டு, மேலும் தொடர்ந்து அவர் கூறியதாவது:-

"இங்கே, தமிழர்கட்கும் மலையாளிகட்கு மிடையே பி. சோ. கட்சி சர்க்கார் பகை மூட்டிவிட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. தி. த. நா. கா.-வினர், அவசிய மற்ற விஷயங்களில் தலையிட்டுக் கொண்டதால், சர்க்காரால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி. த. நா. கா.-வுடன் சேருவதும், பின்னர் விலகுவதும் தான் காங்கிரசின் வழக்கம்; ஆனுல், நாங்கள் அவர்களுடன் சேரவுமில்லை—பிரியவுமில்லை."

"தி. த. நா. கா.-வுடன் சமரசப் பேச்சு வார்த்தை ஏதும் கிடையாது. இதுவரையிலும் தி. த. நா. கா. சம்பந்தமாக சர்க்காரின் நடவடிக்கைகளை காங்கிரஸ் ஆட்சேபிக்கவில்லை. தற்போதுதான் அது முதல் தடவையாகக் கூறுகிறது."

# கழகக் கூட்டங்கள்

✶

**வளவனூர்**

பழைய சினிமா திடலில்

19—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: வ. சோமசுந்தரம்

பேசுவோர்:

தில்லை வில்லாளன்

க. அறிவழகன்

✶

**தர்மபுரி**

தீர்த்தகிரியார் மைதானத்தில்

19—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. எஸ்.நடேசனுர்

பேசுவோர்:

டி. கே. தாமரைச்செல்வன்

பி. எம். குப்புசாமி

✶

**திருப்பூர்**

வள்ளுவர் திடலில்

(ரேடியோ மைதானத்தில்)

19-12-54 மாலை 6-30 மணிக்கு

பேசுவோர்:

நாராயணன்

சி. டி. தண்டபாணி

### சென்னை தூளை கிளை தி.மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

19-12-54 காலை 8 மணியளவில், சென்னை குளை கிளை தி. மு. கழக பணி மனையில் செயற் குழு கூடும். கழக வரவு-செலவு, இதர பிரச்சினைகள் பற்றி முடிவு செய்யப்படும்.

### சேலம் வட்ட தி.மு.(கிளை)கழகச் செயலாளர்களுக்கு

19-12-54 மாலை 2-30 மணிக்கு, சேலம் வட்ட தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டம், மேட்டுப்பட்டி தாதனூர் தோழர் மு. இராமசாமி இல்லத்தில் நடைபெறும். ஜனவரித் திங்களில், தோழர் சம்பத் அவர்களின் சுற்றுப்பிரயாணத்தைப் பற்றியும், நாடக திருத்த மசோதாவைப் பற்றியும் தீர்மானிக்கப்படும்.

### சொற் பயிற்சிக் கூட்டங்கள்

18-12-54 மாலை 6-30 மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் எ. கே. முத்தரச தலைமையில் 'நாமும் நாடும்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

19-12-54 காலை 9 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் (எண் 2, அரக்கநாதபுரம் தெரு) தோழர் வி. குப்புசாமி தலைமையில் 'தமிழ்ப்பற்று' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

### குறள் நெறி

18-12-54 மாலை 6 மணிக்கு, எண் 9, சுப்பராய செட்டி தெரு, திருவல்லிக்கேணியில், முன்னணி கழகச் சார்பில், தோழர் அ. கி. பரந்தாமனுர் தலைமையில் 'குறள் நெறி' என்பது பற்றி பலர் பேசுவர்.

### திரு. வி. க. படிப்பகத் திறப்பு விழா

19-12-54 மாலை 5 மணிக்கு, கலவையை அடுத்த மேல்புலம் கிராமத்தில், திரு. வி. க. படிப்பகத்தின் திறப்பு விழா நடைபெறும். தோழர் காஞ்சி மணிமொழியார் படிப்பகத்தைத் திறந்துவைத்தும், தோழர் சிவலிங்கம் திரு. வி. க. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தும் பேசுவர். தோழர்கள் மா. கா. மாணிக்கம், பா. வரதன், ப. ஜே. தனசிங்கம் ஆகியோரும் பேசுவர்.

### கலா நிகழ்ச்சி

19-12-54 அன்று, அப்பம்பேட்டையில், தோழர் டி. எ. ராமசாமி குழுவினரால் 'இன்றைய அரசியலும், சமுதாயமும்' என்னும் பொருள் குறித்த கலா நிகழ்ச்சி, அப்பம்பேட்டை தி. மு. கழகச் சார்பில் தோழர் கே. ராமநாதன் தலைமையில் நடைபெறும். தோழர் கிட்டப்பா, மற்றும் பலர் பேசுவர்.

### 'அந்தப்புரம்'—நாடகம்

19-12-54 மாலை 6 மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில், அழகிரி மன்ற இலவசப் பள்ளி நிதிக்காக தோழர் மு. கருணாநிதி தலைமையில், வித்யாபதி நாடக மன்றத்தாரால், 'அந்தப்புரம்' எனும் நாடகம் நடைபெறும்.

# கம்யூனிஸ்டு சீனுவுடன் உறவு

## ஜப்பான் மந்திரி சபையில் பிளவு?

### பிரதமர் ஹாடயாமா கூறியதை வெளிநாட்டமைச்சர் மறுக்கிறர்!

டோக்கியோ, டிச. 15—

"பார்மோசா தலைநகரான தைப்பேயிலும், சீனத் தலைநகரான பீகிங்கிலும் உள்ள இரண்டு சர்க்கார்களும் ஆதிபத்திய உரிமை கொண்ட தனி சுதந்திர சர்க்கார்கள்,"

என்று ஜப்பான் கருதுவதாக புதிய பிரதமர் ஹாடயாமா, ஒரு ரேடியோ நிகழ்ச்சியில் கூறினாராம்.

ஆனுல், வெளிநாட்டிலாகா அமைச்சர் ஷிகிமிட்சு இதை மறுத்திருக்கிறுர்.

"பீகிங் சர்க்காரை, ஜப்பான் இன்னும் அங்கீகரிக்கவில்லை," என்று, அவர், ஜப்பான் சட்டசபையின் வெளிவிவகாரக் குழு கேட்டபோது கூறியிருக்கிறுர்.

புதிய பிரதமர் ஹாடயாமா, ரேடியோ நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், "கம்யூனிஸ்டு சீனுவும், பார்மோசாவும் இரண்டும் தனித்தனி நாடுகளாதலால், இரண்டுடனும் ஏன் வர்த்தகம் செய்யக்கூடாது?" என்றும் கேட்டாராம்.

"கம்யூனிஸ்டு சீனுவை ஒரு ஆதிபத்திய உரிமை கொண்ட அரசாங்கமாகக் கருதும் எண்ணமே ஜப்பானுக்கு இல்லை," என்றும் வெளிநாட்டு மந்திரி ஷிகிமிட்சு தெரிவித்திருக்கிறுர்.

கம்யூனிஸ்டு சீனு, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் உடனடியாக மீண்டும் ஸ்தானிக உறவு உண்டாக்கிக் கொள்வது முடியாத காரியம் எனவும், ஏனெனில், ஏராளமான பிரச்சினைகளை தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டியிருக்கிறதென்றும் ஷிகிமிட்சு கூறினுர்.

"ஜப்பான் 'சீட்டோ' ஒப்பந்தத்தில் சேருவதா, வேண்டாமா என்பது குறித்து அரசாங்கம் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை," என்றும் அவர் கூறியிருக்கிறுர்.

புதுடில்லி, டிச. 16—

ஆந்திராவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்களுக்கு ரூ.-30 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# போலீஸ் அதிகாரி போலீசாராலேயே வளைக்கப்பட்டார்!

## துண்டுப்பிரசுரம் விநியோகித்தவரை தாக்கினராம்

## போலீசார் உண்ணுவிரத எதிரொலி

கல்கத்தா, டிச. 16—

ஹௌராவில் உண்ணுவிரதமிருக்கும் போலீசார்கள், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரைச் சுற்றி வளைத்துக் கொண்டனராம்.

உண்ணுவிரதம் குறித்த துண்டு பிரசுரங்களை ஹௌரா இரயிலடியில் ஒரு போலீசார் விநியோகித்துக்கொண்டிருந்த போது, அவரை, அந்த இன்ஸ்பெக்டர் தாக்கியதினுல், கோபம் கொண்டே போலீசார் அவரை சுற்றி வளைத்தனராம்.

உடன் மாவட்ட நீதிபதி இடத்திற்கு விரைந்து சென்று இன்ஸ்பெக்டரை போலீசாரின் பிடியிலிருந்து விடுவித்திருக்கிருர். தாக்கிய போலீஸ் இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென போலீசார் கோரியிருக்கின்றனர்.

அந்த இன்ஸ்பெக்டர் மீது விசாரணை நடைபெறுமெனவும், நீதி வழங்கப்படுமெனவும் நீதிபதி உறுதிமொழி தந்து போலீஸ் அதிகாரியை மீட்டிருக்கிறுர் எனத் தெரிகிறது.

இந்த உண்ணுவிரதப் போராட்டம் ஹௌராவில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளதாகத் தெரிகிறது.

ஆருவது நாளாகத் தொடர்ந்து போலீசார் உண்ணுவிரதத்தைக் கைவிடாது மேற்கொண்டு வருகின்றனர்.

பலவீனமான போலீசாரில் 250 பேர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

போலீசாரின் ஐந்து 'பாரக்ஸ்'கள் (இருப்பிடம்), உண்ணுவிரதமிருந்து நோயாளிகளாகியுள்ள போலீசாருக்கான மருத்துவமனைகளாக மாற்றப்பட்டுள்ளனவாம்.

உண்ணுவிரதமிருப்போர் மருந்துகூட உண்ண மறுக்கின்றனராம்.

தன் சுவாதீனமின்றிப் போய்விட்டவர்களுக்கு ஊசி போடப்படுவதாக போலீஸ் டாக்டர் ஒருவர் கூறியிருக்கிறுர்.

பல போலீசாரின் உடல்நிலை படுமோசமாகியுள்ளதாம்!

# மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கினுல்...

## நேசம் முறியும் என ரஷ்யா எச்சரிக்கை

மாஸ்கோ, டிச. 16—

மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் பாரிஸ் ஒப்பந்தத்தை பிரான்ஸ் அங்கீகரிக்குமானுல், பிரெஞ்சு—சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளிடையே உள்ள நேச ஒப்பந்தத்தை ரத்து செய்து விடுவதாக, ரஷ்யா பயமுறுத்தியுள்ளது.

ஒப்பந்தம் ரத்தாகுமானுல், அதன் முழுபொறுப்பும் பிரான்ஸ் நாட்டின் மீதும், சர்க்கார் மீதும் தான் சாரும் எனவும் ரஷ்யா எச்சரித்துள்ளதாகத் தெரிகிறது.

1944-ம் வருடம் டிசம்பர் 10-ந் தேதி பிரெஞ்சு வெளிநாட்டிலாகா மந்திரியாயிருந்த பீதோவுக்கும்—ரஷ்ய வெளிநாட்டிலாகா மந்திரியாயிருந்த மாலடோவுக்கு மிடையில் மாஸ்கோ நகரில் ஒரு நேச ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இந்த ஒப்பந்தப்படி, பிரான்ஸ்—ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் ஜெர்மனியுடன், தனியாக பேச்சு வார்த்தைகள் நடத்தக்கூடாது; அல்லது பரஸ்பர சம்மதமில்லாமல் இட்லர் சர்க்காருடனே, அல்லது வேறு எந்த சர்க்காருடனே, அல்லது ஜெர்மனி ஆக்கிரமிப்புக் கொள்கையை ஆதரிக்கவோ, அல்லது தொடர்ந்து நடத்தவோ அல்லது ஜெர்மனியில் ஏற்படுத்தப்படும் எந்த சர்க்காருடனே சமாதான ஒப்பந்தமும் செய்துகொள்ளக் கூடாது. இந்த நிபந்தனைகளை நேசஒப்பந்தத்தின் 8-வது ஷரத்து கொண்டுள்ளது.

யுத்தத்திற்குப் பிறகு இரு நாடுகளும் (ரஷியாவும், பிரான்சும்) ஜெர்மனியிலிருந்து ஏதாவது புது ஆபத்து வந்தால் அதைச் சமாளிக்க, கூட்டாக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கவும், ஆக்கிரமிப்புக்கு புது முயற்சி ஏதும் செய்யாமல் தடுக்கவும், உறுதி பூண்டிருப்பதாக இன்னொரு ஷரத்து கூறுகிறது.

இந்த இரண்டு நாடுகளில் ஒன்றுக்கெதிராக மற்றொன்று எந்தக் கூட்டிலும் சேருவதில்லை என்றும் எவ்வித ஒப்பந்தமும் செய்துகொள்வதில்லை என்றும் ரஷியாவும் பிரான்சும் சம்மதித்தனவாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.,